<u>**கம்பம் நகராட்சி**</u>

**2019—ஆம் ஆண்டு மே மாதம் (31.05.2019) ஆம் நாள் வெள்ளி கிழமை முற்பகல் 11.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

<u>**கூட்டப் பொருட்கள்**</u>

| | |
|---|---|
| **1.** | நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(பொறுப்பு) அவர்களின் 3/2019, 4/2019 மற்றும் 5/2019—ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது |
| | **அலுவலகக் குறிப்பு**: மன்றம் பதிவு செய்யலாம். |
| **2.** | சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் கடிதம் எண். **22566/2018/பி3** நாள் **23.08.2018** மற்றும் ஆய்வு கூட்ட நடவடிக்கைகளில் உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பைகளை Biomining முறையில் அகற்றிட ரூ. 444.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள அனுமதியளித்துள்ளதன்படி, மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மேற்படி பணிகள் மேற்கொள்ள திரு. டி. தமிழ்ராஜன், ஒப்பந்ததாரருக்கு வேலைஉத்திரவு வழங்கப்பட்டுள்ளது. சிவகங்கை நகராட்சியில் நடைபெற்ற பயோமைனிங் ஆய்வுகூட்ட அறிவுரைகள் நாள். **15.02.2019**—ன்படி மேற்படி பயோமைனிங் பணி துவங்கும் முன்பு சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் மூலம் சுமார் 5000 cu.m அளவு கொண்ட கொள்ளளவில் குப்பைகள் சேகரித்து வைக்கவும், குப்பைகள் Heep செய்து குவிந்து வைக்கப்பட்டுள்ளதை சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர் மையம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை குழுவின் மூலம் நேராய்வு செய்து அறிக்கை அளித்தபின்பே பணிகள் துவங்கப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு தற்போது Heep செய்து குவிந்து வைக்கப்பட்டுள்ளதை அளவீடு செய்து அறிக்கை அளிக்க கேட்டுக்கொள்ளப்பட்டதில் இயக்குநர், சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர் மையம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை அவர்களின் 09.03.2019ம் தேதிய கடிதத்தில் மேற்கண்ட குழுவின் மூலம் பணியினை ஒப்பந்தகாலம் முடியும் வரை தொடர்ந்து மேற்கொள்ளவும் அதற்கான ஆய்வு கட்டணம் உட்பட ரூ. 10,62,000/— (சேவை வரி உட்பட) செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி மேற்கண்ட தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..** 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதியும், அரசின் திட்டப்பணியாதலால் பணிகள் தொய்வின்றி நடைபெறவும், தற்போது தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் உள்ளதால் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தொகை வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| **3.** | இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். **4**, ஓடைத்தெருவில் அமைக்கப்பட்டுள்ள நவீன ஆடு அடிக்கும் தொட்டி செயல்பாட்டிற்கு (Consent to Operation) தேனி, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களின் செயல்முறை கடிதம் எண். F.0599TEN/RS/DEE/TNPCB/A/2018 – ல் 31.03.2019 வரை அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது.<br>2019—2020ம் ஆண்டிற்கான அனுமதி காலத்திற்கு புதுப்பித்தல் கட்டணம் ரூ. 13,100/—அய் செலுத்த தெரிவித்துள்ளதன்பேரில், தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு.. 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதியும், தற்போது தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளதாலும், மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின்முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |

**4.** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள கீழ்கண்ட வாகனங்களுக்கு 01.04.2019 முதல் 31.03.2020 வரையிலான ஓராண்டு காலத்திற்குரிய சாலைவரி, பசுமை வரி மற்றும் ஆன்லைன் கட்டணம் செலுத்த ஆகும் செலவினம் ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) –க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வாகனங்கள் விபரம் |
|---|---|
| 1 | TN.60T4504 |
| 2 | TN.60T4507 |
| 3 | TN.60T4524 |
| 4 | TN.60ŏ.3591 |
| 5 | TN.60X 0500 |
| 6 | TN.60Y 1959 |
| 7 | TN.60W 0778 |

அலுவலகக்குறிப்பு 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் உள்ளதாலும், அவசர அவசியம் கருதி மேற்படி தொகை வழங்குவதை மன்றம் அனுமதிக்கலாம்.

**5.** சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 07.03.2019ஆம் தேதிய சுற்றறிக்கையின்படியும், அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்04.02.2019–இன்படியும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 வெளியிடப்பட்டுள்ளதில் விதி 23–இல் இணைப்பு XII–இல் கீழ்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

1) 1) பதிவு பெற்ற கட்டிட வடிவமைப்பாளர் (Architects) 2) பொறியாளர் (Engineer)3) கட்டமைப்பு பொறியாளர் (Structural Engineer) 4) கட்டிட அவிவிருத்தியாளர் (Civil Engineer) 5) தரத்தணிக்கையாளர் (QC) 6) நகரமைப்பு வலலுநர் (TP) மற்றும்7) அபிவிருத்தியாளர் (Developers) முதலான தொழில் சார்ந்த வல்லுநர்களுக்கு நகராட்சியில் பதிவு செய்து உத்தரவு வழங்கலாம்.

2) புதிய ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகளின் படி 01.04.2019 முதல் சென்னை , நகராட்சி நிர்வாக ஆணையரால் உருவாக்கப்படும் Screening Committee இல் சான்று பெற்ற நபர்கள் மட்டும் பதிவு செய்ய வேண்டும்.

3) Screening Committee குழு கீழ்காணும் உறுப்பினர்களை கொண்டு அமைக்கப்பட வேண்டும்.

| வ.எண். | உறுப்பினர்கள் | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நகராட்சி ஆணையாளர் | 1 |
| 2 | நகராட்சி பொறியாளர் | 1 |
| 3 | நகரமைப்பு ஆய்வாளர் | 1 |

4) பதிவு செய்யக்கோரும் தொழில் சார்ந்த வல்லுநர்களுக்கான தகுதி, பதிவு செய்யும் வழிமுறைகள் அவர்களின் பணிகள் மற்றும் பொறுப்புகள் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–இல் விதி 23 மற்றும் இணைப்பு XII– இன்படி இருக்க வேண்டும்.

| | |
|---|---|
| | 5) தொழில் சார்ந்த பொறியாளர்கள் பதிவு செய்வதற்கு உரிய அடையாள அட்டை/ ஆளறிச்சான்று / ஆதார் அட்டை மற்றும் புகைப்படத்துடன் பெற்று இணையதளம் வாயிலாக பதிவு செய்ய வேண்டும்.<br>6) பரிசோதனைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட விண்ணப்பதாரரிடம் ரூ.5000/— பதிவு கட்டணமாகவும் மற்றும் நகராட்சி கணக்கில் வைப்புத் தொகையாக ரூ.8000/— செலுத்திய பின்பு பதிவு செய்யலாம். பதிவு செய்யப்பட்ட நபர்களிடம் பதிவேடு பராமரிப்பதுடன் விவரப்பட்டியலை ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தில் மன்றத்தின் பார்வைக்காக வைக்க வேண்டும் மற்றும் அலுவல் சார்ந்த வரைதளத்தில் பதவிட வேண்டும்.<br>7) பதிவு செய்யப்பட்ட தொழிற் சார்ந்த வல்லுநர்கள் தவறு செய்யும் நிலையில் உரிய விதிமுறைகளை பின்பற்றி அவர்களின் பதிலினை ரத்து செய்து அதன் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைப்பதோடு அலுவலக வரைதளத்தில் பதிவிட வேண்டும்.<br><br>மேற்குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு.. மன்றம் அனுமதிக்கலாம். |
| **6.** | இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.12, தாத்தப்பன் குளம் சமுதாயக்கூட கடை எண்.1னை திருமதி.வி.வளர்மதி அவர்கள் வைப்புத் தொகை ரூ.25000/— செலுத்தி மாதவாடகை ரு.1610/— வீதம் நடத்திக் கொள்வதற்கு இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.3207/2017/பி2 நாள்.11.04.2018ன்படி 15.10.2018 முதல் நடத்தி கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. தற்போது மனுதார் தமது குடும்பசூழ்நிலை காரணமாக மேற்படி கடையினை நடத்திட இயலாத காரணத்தினால் கடையினை 31.03.2019 வரை முடித்து, 01.04.2019 முதல் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக தெரிவித்துள்ளார். அன்னாரின் விண்ணபத்தின் பேரில் கடைக்கான உரிமத்தினை 01.04.2019 முதல் இரத்து செய்திடவும் தொடர்ந்து பொது ஏலம் கோரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..** குத்தகை உரிமத்தினை இரத்து செய்திடவும், மக்களைவைத் தேர்தல் நடத்தை விதிமுறைகளுக்கான காலம் முடிவுற்ற பின்னர் பொது ஏலம் கோரவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| **7.** | இந்நகராட்சிக்குச் சொந்தமான டம்பர் பிளேசர் லாரி TN 60T 4504—க்கு கிளட்ச் பிளேட், ரிலீஸ் பேரிங், கிளட்ச் அசெம்பிள் செட் பழுதடைந்துவிட்டது. எனவே பழுதினை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவீனத் தொகை ரூ.25,000/—ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் உள்ளதாலும், மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று நவம்பர் 2019—இல் வருவதாலும், அவசர அவசியம் கருதி, மேற்கண்ட பழுதுகளை சரிசெய்வதற்கு குறுகிய கால விலைப்புள்ளி பெற்று பழுதுநீக்க பணி மேற்கொண்டு செலவீனம் மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| 8. | இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய பொருட்கள் பாதுகாப்பு அறையினை திருமதி எஸ். அம்சுக்கொடி அவர்கள் வைப்புத்தொகை ரூ. 10000/– செலுத்தி வருடாந்திர குத்தகைத் தொகை ரூ. 107000/–க்கு இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண். 3207/2017/பி2 நாள்: 31.01.2019 ன்படி, 01.02.2019 முதல் நடத்தி கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அன்னார் தமது குடும்பசூழ்நிலை காரணமாக மேற்படி குத்தகை இனத்தினை தொடர்ந்து நடத்திட இயலாது எனத் தெரிவித்து மேற்படி குத்தகை இனத்தினை 31.03.2019 வரை முடித்து, 01.04.2019 முதல் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக தெரிவித்து நாள் 11.02.2019 அன்று விண்ணப்பம் அளித்திருந்தார். தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் இருந்து காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி கோரஇயலவில்லை. இந்நிலையில் மனுதாரர் தேர்தல் காலமாக இருப்பதால் வேறுதொழில் தொடங்கிட இயலாது என்பதால் தேர்தல் முடியும்வரை 3மாதங்களுக்கு உரிமத்தினை நீட்டிப்பு செய்து வழங்குமாறு 25.03.2019 அன்று விண்ணப்பித்திருந்தார். அதன்பேரில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலில் இருந்து வருவதாலும், மறுஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலாது. மேலும் இந்த குத்தகை இனத்தின் மூலம் கிடைக்கப்பெறும் வருவாய் மூலம் துறைரீதியாக வசூல் செய்திட பணிக்கப்படும் பணியாளர்க்கு (உத்தேசமாக ரூ. 20000/– வீதம் 2 நபர்க்கு ரூ. 40000/–) வழங்கும் பட்சம் நிதியிழப்பு ஏற்படுவது மட்டுமல்லாது, பணியாளர் பற்றாக்குறை மற்றும் தேர்தல் பணிக்கு ஆட்கள் தேவை என்பதால் துறைரீதியாக வசூல் செய்வது கடும் நிதியிழப்பு ஏற்படும். எனவே மனுதாரர் விண்ணப்பத்தின் பேரில், தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ள 2 மாதம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி உரிமம் ஒப்படைப்பு செய்யும் 30நாட்கள் வரை உத்தேசமாக 3 மாத காலத்திற்கு 01.04.2019 முதல் 30.06.2019 வரை, குத்தகைதாரர் பொருள் பாதுகாப்பு அறைக்கான 2018–19க்கான குத்தகைத் தொகையில் 5% உயர்வு செய்து அதாவது 2018–19 ஏலத்தொகை ரூ. 107000 x 5% = 5350 + 107000 = 112350/- 2019–20க்கான தொகை ரூ.112350/12 =9363 x 3=28089+(1%IT)281+(PT)169= **Rs.28539/-** னை அன்னாரின் விண்ணபத்தின் பேரில் ஏற்கனவே செலுத்தியுள்ள குத்தகை வைப்புத் தொகையிலிருந்து ஈடுசெய்திடவும், தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிகள் முடிவுற்றவுடன் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு:–** நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு, உயர்த்தப்பட்ட குத்தகைத் தொகைக்கு பொருள்பாதுகாப்பு அறையினை நடத்திக்கொள்ளவும், உரிய காலத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 9. | சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களின் ந.க.எண்.29880/2016/WB நாள்.26.03.2019 எண்ணிட்ட கடிதத்தில் உள்ளாட்சிகளில் Web Based Software Application பதிவேற்றம் செய்யப்பட்டதற்கு 01.07.2018 முதல் 31.03.2019 வரையிலான காலங்களுக்கு Bandwidth Cost ரூ.2,14,022/–ஐ கேட்பு வரைவோலையாக The Acccount Officer, BSNL, Chennai என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்திற்கு மன்ற அனுமதியும், ஒப்புதலும் வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு.. 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மன்ற அனுமதியை எதிர்நோக்கி அவசர, அவசியம் கருதி இச்செலவினம் மேற்கொண்டதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம். |
| 10. | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் டெங்கு தடுப்பு பணிகளை மேற்கொள்ள வீடு வீடாக சென்று கொசுப்புழு உள்ள வீடுகளின் நீர்நிலைகளில் உள்ள முதிர்ந்த கொசுக்களை அழிக்கவும், நல்ல தண்ணீரில் வளரக்கூடிய டெங்கு, சிக்கன்குனியா போன்ற நோய்களை பரப்பும் ஏடிஸ் வகை கொசுக்களையும், மலேரியா நோயை பரப்பக்கூடிய அனேபிரிஸ் வகை கொசுக்களையும் உற்பத்தியாகும் இடங்களில் தெளித்து அழிக்கக்கூடிய அபேட் (Temeças) மருந்து இருப்பில் குறைவாக இருப்பதால் அரசு அங்கீகரித்த நிறுவனத்திடம் கொள்முதல் செய்வதற்கும், 2019–20 ஆம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.1,50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பொது சுகாதார பிரிவு அவசர அவசியம் கருதியும், தற்போது பாராளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் உள்ளதால், ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும், மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| | |
| **11.** | கம்பம் நகர் பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்காக நகராட்சி பகுதிகளில் உள்ள பள்ளி மாணவர்கள், அங்கன்வாடி குழந்தைகள், இந்நகரின் குடிசைப்பகுதிகள் மற்றும் காய்ச்சல் ஏற்படும் பகுதிகளில் நிலவேம்பு குடிநீர் வழங்குவதற்காக அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான TAMPCOL நிறுவனத்திடம் 300 கிலோ நிலவேம்பு குடிநீர் சூரணம் வாங்கவதற்கு அனுமதியும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/—க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு.. 1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) பொது சுகாதாரப்பிரிவு அவசர அவசியம் கருதியும், தற்போது பாராளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் உள்ளதால், ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும், மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| **12.** | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு கிருமி நாசினியாக பயன்படுத்தப்படும் நீர்த்த சுண்ணாம்புத்தூள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து வாங்கி உபயோகப்படுத்துவதற்கு 2019—2020 ஆம் ஆண்டிற்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.2,50,000/—க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பொது சுகாதார பிரிவு அவசர அவசியம் கருதியும், தற்போது பாராளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் உள்ளதால், ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும், மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| **13.** | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு கிருமி நாசினியாகவும், டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுக்கவும் பயன்படுத்தப்படும் ப்ளீச்சிங் பவுடர் அரசுஅங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து வாங்கி உபயோகப்படுத்துவதற்கு 2019—2020 ஆம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.3,00,000/—க்கு (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பொது சுகாதார பிரிவு அவசர அவசியம் கருதியும், தற்போது பாராளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் உள்ளதால், ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும் மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்கவும் அனுமதிக்கலாம். |
| **14.** | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொசு மருந்து அடிக்கப்பயன்படும் பைரீத்திரம் இருப்பு குறைவாக உள்ளதால், அரசு அனுமதி பெற்ற நிறுவனங்களிடமிருந்து வாங்கி உபயோகப்படுத்துவதற்கு 2019—2020ஆம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.4,00,000/— (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு.. 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பொது சுகாதார பிரிவு அவசர அவசியம் கருதியும், தற்போது பாராளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் உள்ளதால், ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும், மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| 15. | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் TN 60 Y 1959 வாகனத்திற்கு 26.02.2019 உடன் தகுதிச்சான்று முடிவடைவதால், மராமத்து பணிகள் செய்து புதிதாக தகுதிச்சான்று பெறுவதற்க உத்தேச செலவினம் ரூ.1,30,000/–க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) 22.01.2019ஆம் தேதிய தனி அதிகாரியின் முன் அனுமதி பெறப்பட்டு, மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறப்பட்டதற்கு செலவினத் தொகை ரூ.1,39,000/–க்கு பட்டியல் வரப்பட்டுள்ளது. எனவே செலவினத்தொகை ரூ.10,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பொது சுகாதார பிரிவு அவசர அவசியம் கருதியும், தற்போது பாராளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் உள்ளதால் ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தகுதிச்சான்று பெற்றமைக்கு கூடுதல் செலவினத் தொகையினை மன்றம் அனுமதிக்கலாம். |
| 16. | நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் தலைமையில் 21.02.2018 மற்றும் SBM திட்டம் SHPC கூட்ட நடவடிக்கைகளில் அனுமதியளித்துள்ளதன்படி, இந்நகராட்சியில் சேகரமாகும் குப்பைகளை அந்தந்த இடங்களில் பிரித்து உரம் தயார் செய்திட நுண்உர செயலாக்க மையம் அமைத்திடவும், இதர உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளவும் இந்நகர்மன்ற தீர்மான எண். 1563, நாள். 13.08.2018ன்படி பணிகள் மேற்கொள்ள கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 22866/2018/ப்பி3, நாள். 23.08.2018 உத்திரவின்படியும், மதுரை நகராட்சிகளின் நிர்வாக மண்டல செயற் பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி கடிதம் ந.க.எண்.756/2018/பி2, நாள்.24.08.2018–ன் படியும், நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் கீழ் கம்பம் நகராட்சிக்குட்பட்ட **நந்தகோபாலன் நகர் பூங்கா வளாகத்தில் நுண்உரம் செயலாக்க மையம் (MCC) மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி ரூ.47.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள்** செய்திட அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி, 10.09.2018 ஆம் தேதி மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. 10.09.2018–ல் ஒப்பந்தப்புள்ளி திறப்பின் போது வலைதளம் வழியாக (Online) ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மேலும், நேரடியாக (Off line) கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி மட்டும் (TechnicalBid) திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் திட்டப் பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது அதன் விபரம்.<br><br><table><tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th></tr><tr><td>1</td><td>ஏ.பி. கன்ஸ்ரக்சன், கம்பம்</td></tr><tr><td>2</td><td>திரு. ஆர். சபீர்அலி, அரசு ஒப்பந்ததாரர், 9/16, ஏ.எம். சர்ச் தெரு, கம்பம்.</td></tr></table><br>தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்நதாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (Price Bid) 12.09.2018 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்பட்ட விலைவிகித விபரம் கீழ்கண்டவாறு,<br><table><tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம்</th></tr><tr><td>1</td><td>ஏ.பி. கன்ஸ்ரக்சன், கம்பம்</td><td>மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.99 % அதிகம்</td></tr><tr><td>2</td><td>திரு. ஆர். சபீர்அலி,<br>அரசு ஒப்பந்ததாரர்,<br>9/16, ஏ.எம். சர்ச் தெரு, கம்பம்</td><td>மதிப்பீட்டு தொகைக்கு (+) 5.63 % அதிகம்</td></tr></table> |

| | |
|---|---|
| | மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.99% சதவிகிதம் கூடுதலில் குறைவாக வழங்கிய திருவாளர்கள் . ஏ.பி. கன்ஸ்ரக்சன், கம்பம் ஒப்பந்ததாரரிடமிருந்து விலைக்குறைப்பு செய்ய கோரியதில், ஒப்பந்ததாரர் மூலப்பொருட்களின் விலை ஏற்றத்தினாலும் பணியாளர்களின் கூடுதல் சம்பள ஏற்றத்தினாலும் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள 4.99% (அதிகம்) சதவிகித விலை விகிதத்தினை குறைக்க இயலாது என 17.09.2018ஆம் தேதியில் கடிதம் வழங்கியுள்ளார். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு:— 1)**வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக ஒப்பந்தாரர்களால் கோரப்பட்டுள்ளது. இதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.99% சதவிகிதம் கூடுதலில் குறைவாக வழங்கியுள்ள திருவாளர்கள். ஏ.பி. கன்ஸ்ரக்சன், கம்பம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.<br>2) மேற்காணும் பகுதியில் நுண்உர செயலாக்க மையம் அமைப்பதை ஆட்சேபித்து திரு. பி. ராதாகிருஷ்ணன், தலைவர், ஸ்ரீ நந்தகோபால்சாமி நகர் குடியிருப்போர் நலச் சங்கம், வார்டு எண். 31, எல்.எப். ரோடு, கம்பம் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். WP(MD) No. 19552 of 2018— என்ற எண்ணில் வழக்கு தொடர்ந்து மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்க தடையாணை பெற்றிருந்த நிலையில் மேற்படி வழக்கின் **13.03.2019**ம் தேதிய தீர்ப்புரையில் நந்தகோபால்சாமி நகர் பூங்கா அருகில் உள்ள குடியிருப்புகளுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாமலும், திடக்கழிவு மேலாண்மை பணி மையத்தினை சுத்தமாகவும் வைத்திடவும், பூங்கா வளாகத்தில் நடைபாதை அமைத்தும், விளையாட்டு உபகரணங்கள் பொறுத்தியும், சிறந்த முறையில் பராமரித்திட வேண்டும் எனவும், நுண்உர செயலாக்க மையம் வெகுபொதுமக்களின் விருப்பத்தின் பேரில் அமைக்கப்படுவதாகவும் தெரிவித்து வழக்கினை தள்ளுபடி செய்து உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது **2019** பாராளுமன்ற தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலில் இருந்து தற்போது தளர்வு செய்யப்பட்டுள்ளதால் மேற்படி பணியினை விரைந்து செயல்படுத்திட வேண்டி மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 1260/2018/இ1)** |
| **17.** | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள நவீன எரிவாயு தகன மேடையில் பிரேதங்களை எரியூட்டும்போது அதிக அளவில் துர்நாற்றம் வருவதாக அப்பகுதி மக்கள் கோரியுள்ளதன்பேரில் நகராட்சி பொறியாளர், இளநிலை பொறியாளர் ஆகியோரால் நேரில் ஆய்வு செய்யப்பட்டதில் Smoke Exhaust பழுதாகியுள்ளது தெரியவந்தது. பொதுமக்கள் நலன் கருதி மேற்படி நவீன எரிவாயு தகன மேடையில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்திட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. **1,10,000/—**(ரூபாய் ஒரு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) செலவினத்தில் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு :—** மன்றம் அனுமதிக்கலாம் **(ந.க.எண். 382/2018/இ1)** |
| **18.** | இந்நகராட்சி அலுவலக பணிக்கு 2019—2020 ஆம் ஆண்டிற்கு தேவையான எழுதுபொருட்கள், பணமதிப்பு மற்றும் பண மதிப்பில்லாத படிவங்கள் மற்றும் இதர பதிவேடுகள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ. 5,00,000/— (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு :— 1)** மன்றம் அனுமதிக்கலாம்<br>**2)** அரசு அங்கீகாரம் பெற்ற திருச்சி தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்டிகோ நிறுவன்த்தில் கொள்முதல் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம். |
| **19.** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தொழில் சார்ந்த வல்லுநர்களாக பதிவு செய்வதற்கு இணையதளத்தின் வழியாக (Online Registration) அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 24.02.2019—இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி, பதிவு செய்யக்கோரும் தொழிற் சார்ந்த வல்லுநர்களுக்கான தகுதி சான்றிதழ், அனுபவச்சான்று, பட்டயம் மற்றும் பட்டப்படிப்பிற்கான சான்றுகள் மற்றும் பதிவு கட்டணம் செலுத்தப்பட்டதற்கான இரசீதுகளுடன் வரப்பெற்ற விண்ணப்பங்கள் ஸ்கிரினிங் கமிட்டியால் ஆய்வு செய்யப்பட்டு கீழ்கண்ட விண்ணப்பதாரர்களுக்கு 5 ஆண்டு காலத்திற்கு தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான பதிவு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. |

| வ.எண். | பெயர் | கல்வி தகுதி | அனுபவச்சான்று | பதிவுக்கட்டணம் | வைப்புத்தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | கே. காமேஸ்வரன் | B.E., | 17 வருடம் | ரூ. 5000/– 122/CP/19-20 /0000237 Dt. 16.05.2019 | ரூ. 8000/– வ.வ.எண்.22955 ஆக்ஸிஸ் வங்கி கம்பம். |
| 2 | ஆர். ரவிசங்கர் | B.E., | 15 வருடம் | ரூ. 5000/– 122/CP/19-20 /0000246 Dt.17.05.2019 | ரூ.8000/–நகராட்சி கருவூலம், செலான் எண்.0001297 |
| 3 | அ.கார்த்திகேயன் | DCE., | 7 வருடம் | ரூ. 5000/– 122/CP/19-20 /0000197 Dt. 13.05.2019 | ரூ. 5000/– வ.வ.எண்.333162 இந்தியன் வங்கி கம்பம். ரூ.3000/– நகராட்சி கருவூலம், செலான் எண்.0001406 |
| 4 | எஸ்.ராமகிருஷ்ணன் | B.Tech | 32 வருடம் | ரூ. 5000/– 122/CP/19-20 /0000120 Dt. 07.05.2019 | ரூ. 5000/– வ.வ.எண்.022953 ஆக்ஸிஸ் வங்கி கம்பம். ரூ.3000/– வ.வ.எண்.022980 ஆக்ஸிஸ் வங்கி |
| 5 | எம். பிரகாஷ்குமார் | DCE., | 32 வருடம் | ரூ. 5000/– 122/CP/19-20 /0000193 Dt. 13.05.2019 | ரூ. 5000/– வ.வ.எண்.346489 KVB வங்கி கம்பம். ரூ.3000/– நகராட்சி கருவூலம், செலான் எண்.0001302 |
| 6 | துரையரசு | B.E., | 29 வருடம் | ரூ. 5000/– 122/CP/19-20 /0000248 Dt. 17.05.2019 | ரூ. 5000/– வ.வ.எண்.081165 கனரா வங்கி கம்பம். |
| 7 | கே. சசிக்குமார் | DCE., B.E., | 23 வருடம் | ரூ. 5000/– 122/CP/19-20 /0000276 Dt. 27.05.2019 | |

**அலுவலகக்குறிப்பு:** நாடாளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்த காரணத்தினால் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 800/2019/எப்1)

| | |
|---|---|
| **20.** | கம்பம் நகராட்சி பகுதியில் தினந்தோறும் சேகரமாகும் குப்பைகளில், மக்கும் குப்பைகளை தவிர்த்து, மக்காத குப்பைகளை நகராட்சிக்குச் சொந்தமான கம்பம்– குமுளி ரோட்டில் உள்ள புதிய உரக்கிரடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. தற்போது நுண் உரக்கூடம் (Bio-mining) பணிக்காக உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை முறையில் போடப்பட்டுள்ளதால், தற்போது நகராட்சி பகுதியில் சேகரமாகும் குப்பைகளை அந்த உரக்கிடங்கில் தனியாக குறுகிய ஒருபகுதி மட்டுமே ஒதுகக்ப்பட்டுள்ள இடத்தில் குப்பைகள் கொட்டப்பட்டு வருகிறது. மேற்படி பகுதி முழுவதும் 6 தினங்களுக்குள் குப்பைகள் நிறைந்துவிடுவதால், மேற்கொண்டு அந்த இடத்தில் குப்பைகள் கொட்டுவதற்கு இயலவில்லை. எனவே மேற்படி இடத்தில் மேற்கொண்டு குப்பைகளை கொட்டுவதற்கு ஏதுவாக வாரம் ஒருமுறை ஜேசிபி இயந்திரம் மூலம் ஒதுக்கி சமன்படுத்தினால் மட்டுமே குப்பைகள் கொட்ட இயலும். எனவே மேற்படி ஜேசிபி இயந்திரம் மூலம் ஒதுக்கி சமன்படுத்துவதற்கு ஒரு வாரத்திற்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.6000/– ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பொது சுகாதார பிரிவு அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலன் கருதியும், முன் அனுமதி வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிலிருந்து ஒப்பந்தபுள்ளி கோருவதற்கு மன்றம் முன் அனுமதி வழங்கலாம். |
| **21.** | இந்நகராட்சியில் வார்டு எண் 1 முதல் 22 முடிய பொது மக்களின் தண்ணீர் தேவைக்காக நிறுவப்பட்ட 171 சிறு மின் விசைப்பம்புகளை, 2019 – 2020 ம் ஆண்டு 01.07.2019 முதல் 31.03.2020 முடிய உள்ள காலத்திற்கு வருடாந்திர ஒப்பந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆகும் செலவினம் மதிப்பீடு **ரூ.7.20 இலட்சத்திற்கு** (ரூபாய் ஏழு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத்தை 2019 – 2020 குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். |
| **22.** | இந்நகராட்சி வார்டு எண் 23 முதல் 33 முடிய மற்றும் சுருளிப்பட்டி பம்பிங் ஸ்டேஷன் உட்பட பொது மக்களின் தண்ணீர் தேவைக்காக நிறுவப்பட்ட 125 மின் மோட்டார்களை, 2019 – 2020 ம் ஆண்டிற்கு 01.07.2019 முதல் 31.03.2020 முடிய உள்ள காலத்திற்கு வருடாந்திர ஒப்பந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆகும் செலவின தொகை **ரூ.6.75 இலட்சத்திற்கு** (ரூபாய் ஆறு இலட்சத்தி எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத் தொகையினை 2019 – 2020 குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். |
| **23.** | இந்நகராட்சி வார்டு எண் 1 முதல் 17 முடிய உள்ள வார்டுகளில் குடிநீர் விநியோக பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள், மற்றும் சுலீஸ் வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து குடிநீர் விநியோகம் செய்ய, 2019 – 2020ம் ஆண்டிற்கு 01.07.2019 முதல் 31.03.2020 முடிய உள்ள காலத்திற்கு வருடாந்திர ஒப்பந்த பராமரிப்பு பணி செய்திட அனுமதியும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.9,20,000/–க்கும் (ரூபாய் ஒன்பது இலட்சத்தி இருபதாயிரம் மட்டும்) மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு..<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) மேற்படி தொகையினை 2019 – 2020 குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். |

| | |
|---|---|
| **24.** | இந்நகராட்சி வார்டு எண் 18 முதல் 33 முடிய உள்ள வார்டுகளில் குடிநீர் விநியோக பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள், மற்றும் சுலீஸ் வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து குடிநீர் விநியோகம் செய்ய, 2019 – 2020ம் ஆண்டிற்கு, 01.07.2019 முதல் 31.03.2020 முடிய உள்ள காலத்திற்கு வருடாந்திர ஒப்பந்த பராமரிப்பு பணி செய்திட அனுமதியும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.9,20,000/–க்கும் (ரூபாய் ஒன்பது இலட்சத்தி இருபதாயிரம் மட்டும்) மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு..<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத் தொகையை 2019 – 2020 குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். |
| **25.** | இந்நகராட்சியில் உள்ள 33 வார்டுகளிலும் பொதுமக்களின் தண்ணீர் தேவைக்காக நிறுவப்பட்ட அடிபம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரி செய்யும் பொருட்டு, 2019 – 2020 ஆம் ஆண்டிற்கு, 01.07.2019 முதல் 31.03.2020 முடிய உள்ள காலத்திற்கு வருடாந்திர ஒப்பந்த பராமரிப்பு பணிகள் செய்ய அனுமதியும், அதற்கான உத்தேச செலவினம் **ரூ.75,000/–**க்கு (ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத்தை 2019 – 2020ம் ஆண்டு குடிநீர் திட்ட நிதியில் மேற்கொள்ளலாம். |
| **26.** | இந்நகராட்சி சுருளிப்பட்டி பம்பிங் ஸ்டேஷனில் உள்ள நீரேற்று விசைப்பம்புகளை, தினசரி 24 மணி நேரமும் தொடர்ந்து இயக்கும் பணியினை உரிய தகுதியான பணியாளர்களை கொண்டு 01.07.2019 முதல் 31.03.2020 முடிய உள்ள காலத்திற்கு, வருடாந்திர ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினத்திற்கு தயார் செய்த மதிப்பீடு **ரூ.6.10 இலட்சத்திற்கு** (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு..<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத் தொகை 2019 – 2020 குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். |
| **27** | இந்நகராட்சி சுருளிப்பட்டி நீரேற்று நிலையத்தில் நிறுவப்பட்ட கேஸ் குளோரினேசன் சிலிண்டர் மற்றும் இயந்திரங்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு. 2019 – 2020 ம் அண்டிற்கு 01.07.2019 முதல் 31.03.2020 முடிய உள்ள காலத்திற்கு வருடாந்திர ஒப்பந்த பராமரிப்பு பணி செய்ய அனுமதியும், அதற்கான உத்தேச செலவுத் தொகை **ரூ.1,25,000/–** (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு..<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத்தொகையினை 2019 –2020 குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். |

| | |
|---|---|
| **28.** | இந்நகராட்சிக்குட்பட்ட தாத்தப்பன்குளம் முகைதீன் ஆண்டவர் புரம் உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள வடக்கு பக்கம் அமைந்துள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டிடம் மிகவும் பழுதாகி கான்கிரீட் விரிசல் ஏற்பட்டுள்ளபடியாலும், தளம் மற்றும் சுவர்பூச்சு, சன்சைடு பழுதாகி உள்ளபடியாலும், பள்ளி வளாகத்தில் லேப் மற்றும் கம்ப்யுட்டர் சென்டர் வர்ணம் பூச்சும்பணி மராமத்து பணிகள் செய்யவேண்டியுள்ளதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 9,80,000/— (ரூபாய் ஒன்பது இலட்சத்து என்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளவும், செலவினத்தை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு** : — மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1938/2018/இ1) |
| **29.** | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் TN 60 T 4524 வாகனத்திற்கு 20.06.2019 உடன் தகுதிச்சான்று முடிவடைவதால், மராமத்து பணிகள் செய்து புதிதாக தகுதிச்சான்று பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ. 1,50,000/—ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு.. 1) மன்றம் அனுமதிக்கலாம் <br> 2)அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று தகுதிச்சான்று பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம். |

**ஒப்பம்/— திருமதி. இ. செல்வராணி,**
**ஆணையாளர்(பொ) மற்றும் தனி அதிகாரி,**
**கம்பம் நகராட்சி.**

**நாள். 31.05. 2019**
**இடம். கம்பம்**